**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 03/2022</u>**

நாள் 18.06.2025

DW1 – நடராஜன்

த/பெ – மலையப்பகவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2025.)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்தில் பழைய சர்வே எண்.251 என்றால் சரிதான். முத்துச்சாமி கவுண்டர், பொன்னுச்சாமிகவுண்டர் ஆகிய இருவரும் சேர்ந்து 7.84 ஏக்கரில் பொதுவில் 1/4 பங்கு சொத்தான 1.96 ஏக்கர் சொத்தை வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதில் பொன்னுச்சாமிகவுண்டர் வா.சா.ஆ.2 மூலம் முத்துச்சாமிகவுண்டரின் பாதி பாகத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். முத்துச்சாமிகவுண்டர் மற்ற கூட்டு பங்குதாரர்களுடன் சேர்ந்து சொத்தை அனுபவித்து வந்ததில் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தில் உட்பிரிவு செய்யப்பட்டு பொன்னுச்சாமிக்கவுண்டருக்கு சர்வே எண்.33/11, 1.90 ஏக்கர் பூமி உட்பிரிவு ஏற்பட்டுள்ளது. அதேபோல் கிணறு தடம் உள்ளிட்டவைகளுக்கு சர்வே எண் 33/10 என்று உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு ஏற்பட்ட காலம் முதல் சர்வே எண் 33/11–ல் உள்ள 1.90 ஏக்கர் சொத்தை வாதியின் தாத்தா பொன்னுச்சாமிகவுண்டர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அதில் 1.50 ஏக்கரை பொன்னுச்சாமிகவுண்டர் 1982–ம் ஆண்டில் வா.சா.ஆ.3–ன் மூலம் அப்புச்சாமி என்பவருக்கும் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த அப்புச்சாமியிடம் இருந்து நான் 1989–ம் ஆண்டில்

வா.சா.ஆ.8–ன் மூலம் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் சர்வே எண்.251, 236–ல் புஞ்சை 0.60.5 க்கு 1.50 ஏக்கர் கிரையம் மேற்படி காலைகளில் இன்னும் என் பங்கு பாத்தியம் இருக்கிறது என்ற வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(வா.சா.ஆ.3, வா.சா.ஆ.8 அசல் கிரைய ஆவணங்களை ஆஜர் செய்ய வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.18 18:50:15 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**